10.09.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.182/2023**

**வா.சா. 2–குணசேகரன், த/பெ. சீனிவாசன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த என்னுடைய முதன்மை சாட்சிய வாக்குமூலத்தை தயாரிக்க நான் தான் அறிவுரை வழங்கினேன். என் தாத்தாவின் பெயர் மல்லமுத்து. என் தாத்தாவிற்கு என் தகப்பனார் சீனிவாசன், சித்தப்பா தங்கராசு, அத்தைமார்கள் பெரியம்மா, மற்றொரு பெயர் தெரியாது. தாவா சொத்து என்னுடைய தாத்தா மல்லமுத்து கிரைய சொத்து என்று சொன்னால் சரியல்ல, பூர்வீக சொத்து மூன்று தலைமுறை சொத்தாகும். என் தாத்தா மல்லமுத்துராஜாவின் தகப்பனார் பெயர் அலியான் முத்துராஜா என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மல்லமுத்துராஜா முத்தையம்பாளையம் கிராம சர்வே எண்.224/2 – 1 ஏக்கர் 20 செண்ட் நிலம் கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுக்கும் போது என் தாத்தா வாங்கிய 1959 ம் ஆண்டுக்கான கிரையாவணத்தை கொடுக்கவில்லை என்று

சொன்னால் சரிதான். என்னுடைய தாத்தா மல்லமுத்துராஜா சர்வே எண்.224/2 க்கு நிலத்தை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.224/2 சொத்தை தவிர மற்ற பூர்வீகமாக பாத்தியப்பட்ட சர்வே எண்கள் தெரியுமா என்றால் 198/13 பி ஆகும். சர்வே எண்.224/2 மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 20 செண்டில் என் தகப்பனார் சீனிவாசன், என் சித்தப்பா தங்கராசு இருவருக்கும் சரிபாகம் என்று சொன்னால் சரிதான். இவ்வாறு 1 ஏக்கர் 20 செண்ட் நிலத்தை பொறுத்து என் அத்தைமார்களிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். முத்தையம்பாளையம் கிராம அயன்புஞ்சை சர்வே எண்.224/2 – 1 ஏக்கர் 20 செண்ட் நிலத்தில் 60 செண்ட் தனக்கு பாத்தியம் என்றும், அம்மாப்பட்டி கிராம அயன்புஞ்சை சர்வே எண்.198/13 – 25 செண்ட் நிலத்தில் 12 செண்ட் தனக்கு பாத்தியப்பட்டது என என் தகப்பனார் சீனிவாசனுக்கு 1983 ம் ஆண்டு என் சித்தப்பா தங்கராசு கிரையம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். வாதி ரமேஷ்க்கு நான் 2020 ம் ஆண்டு கிரையம் எழுதிக்கொடுக்கும் போது அம்மாப்பட்டி கிராம அயன்புஞ்சை சர்வே எண்.198/13 – 20 செண்ட் என கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அவர்கள் எப்படி எழுதிக்கொண்டார்கள் என தெரியாது,

10.09.2025



ஆனால் பத்திரம் படி 12 ½ செண்ட் மட்டும் தான் எழுதிக்கொடுத்தேன். சர்வே எண்.198/13பி –ல் தற்போது சொல்கின்ற படி 25 செண்ட் நிலம் எழுதிக்கொடுப்பதற்கு என்னென்ன விவரப்படி எனக்கு பாத்தியப்பட்டு வாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சீனிவாசன் கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தான் எழுதிக்கொடுத்தேன். அந்த சீனிவாசன் எழுதிக்கொடுத்த பத்திரம் என் தகப்பனார் பெயரில் தான் உள்ளது. என் தகப்பனார் சீனிவாசன் தாவா சொத்தை பொறுத்து எனக்கு ஏதேனும் பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்தை கிரையம் கொடுக்கும் போது, நான்கெல்லை மட்டும் தான் காண்பித்து தான் எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

(வழக்கறிஞர் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.